## பத்தாம் வகுப்பு அரையாண்டுத் பொதுத்தேர்வு – 2016-17

## சமூக அறிவியல் - விடைக்குறிப்புகள்

சரியான விடை

| | | |
|---|---|---|
| 1. ஆ. கால்பர்ட் | 2. ஆ. அமெரிக்கா | 3. இ. முதல் இந்திய சுதந்திரபோர் |
| 4. ஈ. கேரளா | 5. இ. பஞ்சசீலம் | 6. இ. இணைப்புக் கருவி |
| 7. அ. அக்டோபர் 12, 2005 | 8. ஆ. நீலகிரி | 9. அ. மண்வள பாதுகாப்பு |
| 10. அ. வான்வழி | 11. ஆ. உணரி | 12. இ. மக்களின் வாழ்க்கைத் தரத்தை |
| 13. இ. ஆச்சார்ய வினோபாவே | 14. அ. 1967 | |

பொருத்துக

15. (i)

அ. ஜெர்மனி

ஆ. எதிர்வாக்கு

இ. இராஜாராம் மோகன்ராய்

ஈ. இராஜாஜி

உ. டாக்டர் எஸ். தருமாம்பாள்

15. (ii)

அ. சதுப்பு நிலம்

ஆ. ஒரு வகை நிலக்கரி

இ. ஹிமாசல பிரதேசம்

ஈ. பெங்களுரு

உ. மும்பை

2 மதிப்பெண் வினாக்கள்

16. **தைபிங் கலகம்**
    1. நான்கிங் உடன்படிக்கையை பின்பற்றி **அமெரிக்கர்களும், பிரெஞ்சுக்காரர்களும்** சீனாவுடன் பல ஒப்பந்தங்களை ஏற்படுத்தினர்.
    2. **கி.பி.1854 ஆம் ஆண்டு மஞ்சு அரசுக்கும் வெளிநாட்டவர்களுக்கும் எதிராக** சீனர்கள் கலகத்தில் ஈடுபட்டனர். இக்கலகம் தைப்பிங் கலகம் எனப்படுகிறது.

17. **வெர்செல்ஸ் உடன்படிக்கை**
    1. ஜெர்மனியின் படைபலம் குறைக்கப்பட்டது.
    2. ஜெர்மனியின் குடியேற்றங்கள் நேசநாடுகளால் பங்கீடு செய்யப்பட்டன.

18. **ஹிட்லர் அறிவிப்பு** .
    1. ஒரே மக்கள்
    2. ஒரே நாடு
    3. ஒரே தலைவர் என்ற கொள்கையை ஹிட்லர் அறிவித்தார்.

19. **ஐரோப்பிய ஒன்றியத்தின் நிறுவன நாடுகள்**
    1. பெல்ஜியம் 2. பிரான்சு 3. இத்தாலி 4. லக்ஸம்பர்க் 5. நெதர்லாந்து 6. மேற்கு ஜெர்மனி

20. **பெரும் புரட்சியில் ஈடுபட்ட முக்கிய தலைவர்கள் - இடங்கள்**
    1. இரண்டாம் பகதுர்ஷா - டெல்லி
    2. ஜான்சிராணி இலட்சுமிபாய் - மத்திய இந்தியா
    3. பேகம் ஹஸ்ரத் மஹால் - லக்னோ
    4. நானாசாகிப், தாந்தியாதோப் - கான்பூர்
    5. கன்வர்சிங் - பீகார்.

21. **ஆரிய சமாஜத்தின் பணிகள்**

1. விலங்குகளை பலியிடுதல், உருவ வழிபாடு, மூடப்பழக்கவழக்கங்கள், சொர்க்கம், நரகம் போன்ற கோட்பாடுகளை எதிர்த்தது.
2. குழந்தை மணம், பலதார மணம், பர்தா அணிதல், உடன் கட்டை ஏறுதல் போன்வற்றை எதிர்த்தது.
3. பெண் கல்வி, கலப்பு மணம், சமபந்தி உணவு, தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றத்திற்கு பாடுபட்டது.
4. தயானந்த ஆங்கிலோ வேதிக் பள்ளிகளை நிறுவி, வேதம் மற்றும் ஆங்கில கல்வியை பயிற்றுவித்தது.

22. **இந்திய தேசிய காங்கிரஸ்**

1. 1885 ஆம் ஆண்டு
2. ஆலன் ஆக்டேவியன் ஹியூம் என்பரின் ஆலோசனையின் பேரில் இந்திய தேசிய காங்கிரஸ் தொடங்கப்பட்டது.

23. **1907 – பாரதியார் வெளியிட்ட பத்திரிக்கை**

1. தமிழ் வார பத்திரிக்கை – இந்தியா
2. ஆங்கில பத்திரிக்கை – பால பாரதம்

**24. இந்தியா – ஐ.நாவின் தீவிர ஆதரவாளர்**

1. ஐ.நா.வின் கொள்கைகளுக்கு முழு ஆதரவு கொடுப்பதோடு, அக்கொள்கை வெற்றி பெறவும் அதன் மூலம் உலக அமைதியை நிலைநாட்டவும் தொடர்ந்து பாடுபட்டு வருகிறது.
2. இன ஒதுக்கல் பிரச்சனை, சூயஸ் கால்வாய் பிரச்சனை, காங்கோ உள்நாட்டு போர் ஆகியவற்றில் இந்தியா ஐ.நாவின் ஆதரவாளராக செயல்பட்டது.

25. **ஜனநாயகம் - ஆப்ரஹாம் லிங்கன்**

ஆபிரகாம் லிங்கன் கருத்துப்படி “மக்களால் மக்களுக்காக மக்களே ஆட்சி செய்வது” மக்களாட்சி.

26. **இந்தியாவின் வடக்கு மலைகளிலுள்ள புனிதத் தலங்கள்**

1. அமர்நாத் 2. கேதார்நாத் 3. பத்ரிநாத் 4. வைஷ்ணவி தேவி கோவில்.

27. **ஜெட் காற்றுகள்**

1. வளிமண்டலத்தின் உயர் அடுக்குகளில் காணப்படும் காற்றோட்டத்தினை ஜெட் காற்றுகள் என்கிறோம்.
2. பருவகாலத்தின் தொடக்க காலத்தையும், அது முடிவடையும் காலத்தையும் நிர்ணயிக்கின்றன.
3. பஞ்சாப், ஹரியானா பகுதிகளில் கடும் மழையை தோற்றுவிக்கின்றன.

28. **இயற்கை தாவரம்**

1. அன்றாட வாழ்வின் தேவைகளை நிறைவு செய்ய இயற்கையிலிருந்து பெறப்படும் பொருட்களை இயற்கை வளங்கள் என்கிறோம்.
2. எ.கா. சூரியன், காற்று, நீர்

29. **பருத்தி விளையும் இடங்கள்**

1. குஜராத் 2. மகாராஷ்டிரம் 3. ஆந்திரபிரதேசம் 4. கர்நாடகா
5. தமிழ்நாடு 6. பஞ்சாப் 7. மத்திய பிரதேசம்

30. **தொழில் அமைவிட காரணிகள்**

1. மூலப்பொருட்கள் 2. எரிசக்தி 3. போக்குவரத்து 4. மனித சக்தி
5. நீர்வளம் 6. சந்தை 7. அரசாங்க கொள்கைகள்

31. **மின்னியல் கழிவு**

1. தொலைக்காட்சி பெட்டிகள், கைபேசி, கணினி, குளிர்சாதனப்பெட்டி, அச்சு இயந்திரங்கள் போன்றவை மின்னியல் கழிவுப் பொருட்களாகும்.
2. இந்தியாவில் ஆண்டுதோறும் 3,80,000 டன்கள் மின்னியல் கழிவாக உருவாகிறது.
3. இவை சுற்றுச்சூழலை மாசடையச் செய்கிறது.

32. **வணிகம் - வகைகள்**

1. வணிகம் என்பது பொருட்கள் மற்றும் சேவைகளை வாங்குவதும், விற்பதும் அல்லது பண்ட மாற்றும் செய்யும் செயலே ஆகும்.

1. **வணிகத்தின் வகைகள்:** **1.** உள்நாட்டு வணிகம். 2. பன்னாட்டு வணிகம்.

33. **பேரிடர் அபாய நேர்வு குறைப்பின் முக்கிய அம்சங்கள்**

1. தணித்தல் 2. ஆரம்ப முன்னெச்சரிக்கை அமைப்பு 3. பேரிடர் வரும்முன் தயார் நிலை 4. மீட்பு

34. **நாட்டு வருமானம் அறிவதன் அவசியம்**

1. ஒரு நாட்டின் பொருளாதார செயல்பாடுகளின் நிலையை கணக்கிடப் பயன்படுகிறது.
2. ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் பணிகளின் மதிப்பை அறியப் பயன்படுகிறது.

**35. உலகமயமாதல்**

1. ஒரு நாட்டின் அங்காடிகளை பன்னாட்டு அங்காடிகளுடன் தொடர்புபடுத்துவதே உலகமயமாதல் ஆகும்.
2. மூலப்பொருட்களை பல நாடுகளிலிருந்து பெற்று பண்டங்களை உற்பத்தி செய்து உலக நாடுகளுக்கு விற்பனைக்கு அனுப்பி வைத்தல்.

வேறுபாடுகள் (ஏதேனும் 2 மட்டும்)

36.

| **மேற்கு கடற்கரை சமவெளி** | **கிழக்கு கடற்கரை சமவெளி** |
|---|---|
| குஜராத் முதல் கன்னியாகுமரி வரை பரவியுள்ளது | மேற்கு வங்காளத்திலிருந்து கன்னியாகுமரி வரை பரவியுள்ளது |
| வடக்கே கொங்கன் கடற்கரை அமைந்துள்ளது | வடக்கே வடசர்கார் சமவெளி அமைந்துள்ளது |
| தெற்கே மலபார் கடற்கரை அமைந்துள்ளது | தெற்கே சோழ மண்டல கடற்கரை அமைந்துள்ளது |
| மேற்கு தொடர்ச்சி மலைக்கும் அரபிக் கடலுக்கும் இடையில் காணப்படுகிறது | கிழக்கு தொடர்ச்சி மலைக்கும் வங்காள விரிகுடாவிற்கும் இடையில் காணப்படுகிறது |
| இங்கு ஏரிகள், கழிகள் மற்றும் காயல்கள் காணப்படுகின்றன | இச்சமவெளியில் ‘சிலிகா ஏரி’ ‘கொல்லேரு ஏரி’ அமைந்துள்ளது. |

37.

| **லூ** | **நார்வெஸ்டர்ஸ்** |
|---|---|
| இது வலிமையான வெப்பக்காற்று | இது இடியுடன் கூடிய தலக்காற்று |
| இந்தியாவின் வடக்கு மற்றும் வடமேற்கு பகுதிகளில் வீசும். | வடகிழக்கு இந்தியப் பகுதிகளில் வீசும் |
| குறைந்த மழை பொழிவை தரும் | அதிக மழைப் பொழிவைத் தருகிறது |
| கோடை காலத்தில் பகல் நேரத்தில் வீசும் | இடியுடன் மழை பெய்யும் |

38.

| **காற்று சக்தி** | **அனல் மின்சக்தி** |
|---|---|
| காற்றின் வேகத்தை பயன்படுத்தி மின்சாரம் தயாரிப்பதாகும் | நிலக்கரி, பெட்ரோலியம், இயற்கை எரிவாயு போன்றவற்றிலிருந்து உற்பத்தி செய்யப்படுகிறது |
| உற்பத்தி செலவு குறைவு | உற்பத்தி செலவு அதிகம் |
| மாசு ஏதும் ஏற்படுத்தாது | மாசு ஏற்படுத்தக்கூடியது |
| எளிதில் புதுப்பிக்கக்கூடியது | புதுப்பிக்க இயலாத வளம் |
| தமிழ்நாடு, கர்நாடகா, கேரளாவில் உற்பத்தி மையங்கள் உள்ளன | பஞ்சாப், ஹரியானா, இராஜஸ்தான் காணப்படுகிறன |
| **காற்று சக்தி** | **அனல் மின்சக்தி** |

39.

| **காரீ்ப் பயிர்கள்** | **ராபி பயிர்கள்** |
|---|---|
| கோடைகாலப் பயிர்கள் என்று அழைக்கப்படுகிறது | குளிர்காலப் பயிர்கள் என்று அழைக்கப்படுகின்றன. |
| ஜூன் மாதம் விதைக்கப்படுகிறது | நவம்பர் மாதம் விதைக்கப்படுகிறது |
| நவம்பர் மாதம் அறுவடை செய்யப்படுகிறது | மார்ச் மாதம் அறுவடை செய்யப்படுகிறது |
| நெல், சோளம், பருத்தி, சணல், கரும்பு, கடலை போன்றவை முக்கியப் பயிர்கள் | கோதுமை, புகையிலை, கடுகு, பருப்பு வகை மற்றும் தானியங்கள் முக்கியப் பயிர்கள் |

40.

| வேளாண் சார்ந்த தொழிலகம் | கனிமம் சார்ந்த தொழிலகம் |
|---|---|
| வேளாண் பொருட்கள் மூலப் பொருட்களாக பயன்படுத்தப்படுகின்றன. | உலோகம் மற்றும் உலோகமற்ற பொருட்கள் மூலப்பொருட்களாக பயன்படுத்தப்படுகின்றன. |
| மூலப்பொருட்கள் கிடைக்கும் இடங்களில் தொழிற்சாலைகள் செயல்படுகின்றன. | கனிமச்சுரங்கங்களுக்கு அருகில் தொழிற்சாலைகள் செயல்படுகின்றன. |
| எ.கா. பருத்தி ஆலைகள், சணல் ஆலைகள், சர்க்கரை ஆலைகள் | எ.கா. இரும்பு எ.்.கு, சிமெண்ட் தொழிற்சாலைகள் |
| மகாராஷ்டிரம், மேற்கு வங்காளம், உத்திர பிரதேசம் | சோட்டா நாகபுரி பீடபூமி |

41.

| நீர் மாசடைதல் | நிலம் மாசடைதல் |
|---|---|
| நன்னீரில் தரத்தை மாற்றம் செய்கிறது | நிலம் மாசடைகிறது |
| நீரில் வாழும் உயிரினங்களுக்கு தீங்கு விளைவிக்கிறது | தாவரங்களுக்கும், விலங்குகளுக்கும் பாதிப்பு ஏற்படுகிறது |
| வேதியியல், இயற்பியல், உயிரியல் மாற்றத்தினால் ஏற்படுகிறது | நகர கழிவுகள், பூச்சிக் கொல்லி மருந்துகள், இரசாயனங்கள் மூலம் ஏற்படுகிறது. |
| பாக்டீரியா, வைரஸ் கிருமிகள்,ஒட்டுண்ணிகள், புழுக்கள் நீரை மாசுப்படுத்துகிறது | பூச்சு கொல்லிகள், தொழிலக கழிவுகள், சாக்கடைகள் போன்றவை நிலத்தை மாசுப்படுத்துகிறது |
| எண்ணெய், பிளாஸ்டிக், பூச்சிக் கொல்லி போன்றவைகளால் மாசடையும் | எரிபொருள் கொட்டப்படுவதாலும், தொழிக கழிவுகள் நேரடியாக மண்ணில் கலப்பதாலும் நிலம் மாசடைகிறது |

42

| ஏற்றுமதி | இறக்குமதி |
|---|---|
| நம் நாட்டின் உபரிப் பொருட்களையும் சேவைகளையும் அந்நிய செலவாணிக்காக வெளிநாட்டிற்கு விற்பதாகும் | நமக்கு தேவையான பொருட்களையும், சேவைகளையும் வெளிநாட்டிலிருந்து வாங்குவதாகும் |
| விவசாய பொருட்கள், கனிமங்கள், இராசாயன பொருட்கள், இயந்திர பொருட்கள், ஆடை ஆபரணங்கள் | இயந்திரங்கள், மின்னியல் இயந்திரங்கள், மருந்துகள், பெட்ரோலியம், உரங்கள், செய்தித் தாள்கள் |
| இந்தியா ஏறத்தாழ 7500 விதமான பொருட்களை உலகின் சுமார் 190 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது | ஏறத்தாழ 6000 விதமான பொருட்கள் 140 நாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறது. |
| அந்நிய செலாவணியை பெறுகிறோம் | அந்நிய செலாவணியை இழக்கிறோம் |

43.

| தேசிய நெடுஞ்சாலைகள் | மாநில நெடுஞ்சாலைகள் |
|---|---|
| மாநில தலைநகரங்களை தேசிய தலைநகருடன் இணைக்கின்றன. | மாவட்ட தலைநகரங்களை மாநில தலைநகரோடு இணைக்கின்றன. |
| இவற்றை மத்திய பொதுப்பணித் துறை பராமரித்து வருகிறது | இவற்றை மாநில பொதுப்பணித் துறை பாராமரித்து வருகிறது |
| 7,07,548 கி.மீ. நீளம் உடையது | 1,31,899 கி.மீ. நீளம் உடையது. |
| தமிழ்நாடு-கேரளாவை இணைக்கும் 650கி.மீ. சாலை | கடலூர் - சித்தூர் சாலை |

தலைப்பு வினாக்கள்

44. **முசோலினி**

அ) அதிக படை – அதிக மதிப்பு

ஆ) 1939

இ) சிசிலி தீவு

ஈ) இத்தாலிய குடிமகனால் கொல்லப்பட்டார்

45. **இரண்டாம் உலகப்போர்**

**அ)** வெர்செயில்ஸ்

**ஆ)** வின்ஸ்டன் சர்ச்சில்

**இ)** ரோம் - பெர்லின் - டோக்கியோ அச்சு ஒப்பந்தம்

**ஈ)** 1945

46. **மத்திய இந்தியாவில் பெரும் புரட்சி**

**அ)** தாந்தியா தோப்

**ஆ)** குவாலியர்

**இ)** போரில் கொல்லப்பட்டார்

**ஈ)** கைது செய்யப்பட்டு கொல்லப்பட்டார்

47. **மவுண்ட் பேட்டன் திட்டம்**

**அ)** மவுண்ட் பேட்டன் பிரபு

**ஆ)** மவுண்ட் பேட்டன் பிரபு

**இ)** இந்தியா, பாகிஸ்தான் இரு நாடுகளாக பிரிப்பது

**ஈ)** காங்கிரசும், முஸ்லீக்கும் ஏற்றுக் கொண்டன.

5 மதிப்பெண் வினாக்கள்

48. (அ) **முதல் உலகப் போரின் விளைவுகள்**

1. **சேதம்**
இப்போர் பொருளாதார சேதத்தையும், உயிரிழப்பையும் ஏற்படுத்தியது.
2. **சங்கம் தோற்றம்**
உலக நாடுகளில் அமைதியை நிலை நாட்ட 1920ஆம் ஆண்டு சர்வதேச சங்கம் வடிவமைக்கப்பட்டது.
3. **ஆட்சி மாற்றம்**
ஜெர்மனி, ரஷ்யா, ஆஸ்திரியா துருக்கி மற்றும் பல்வேறு நாடுகளில் மன்னராட்சி ஒழிக்கப்பட்டு ஜனநாயக ஆட்சி மலர்ந்தது.
4. **இழப்பீடு தொகை**
1. ஜெர்மனியின் படைபலம் குறைக்கப்பட்டு, அதன்மீது போர் இழப்பீடு சுமத்தப்பட்டது.
2. ஜெர்மனி தன்னிடம் இருந்த சார் நிலக்கரி சுரங்கத்தை 15 ஆண்டுகளுக்கு பிரான்சிற்கு அளித்தது.
5. **உடன்படிக்கைகள்**
வெற்றி பெற்ற நாடுகள் தோல்வியுற்ற நாடுகள் மீது சாதகமற்ற உடன்படிக்கைகளை ஏற்றுக்கொள்ளுமாறு வற்புறுத்தினர்.
6. **சுதந்திர நாடுகள்**
லிதுவேனியா, லாட்வியா மற்றும் எஸ்தானியா நாடுகள் சுதந்திரம் பெற்றது.
7. **குடியரசுகள் தோற்றம்**
செக்கோஸ்லோவாகியா மற்றும் போலந்து நாடுகளில் குடியரசுகள் தோன்றின.

(ஆ) **இராம கிருஷ்ண மடத்தின் செயல்பாடுகள்**

1. **நிறுவுதல்**
இராமகிருஷ்ணமடம் 1897ல் பேலூரில் சுவாமி விவேகானந்தரால் நிறுவப்பட்டது.
2. **தொண்டாற்றுதல்**
உடல் நலம், பேரழிவு நிவாரணம், கிராம முன்னேற்றம், ஆதிவாசிகள் நலன், துவக்கக் கல்வி, உயர் கல்வி மற்றும் கலாச்சார முன்னேற்றம் போன்றவற்றிற்காக பெருந்தொண்டாற்றி வருகிறது.
3. **மருத்துவ பணி**
மருத்துவமனைகள், அறக்கட்டளை மருத்துவமனைகள், மகப்பேறு மருத்துவமனைகள், ஆதரவற்றோர் இல்லங்கள், முதியோர் இல்லங்கள், செவிலியர் பயிற்சி பள்ளிகள் போன்றவற்றை நடத்தி வருகிறது.
4. **கல்விப் பணி**
இந்தியா முழுவதும் கல்வி நிறுவனங்கள், பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள், தொழிற்கல்வி பயிற்சி மையங்களை நிறுவி கல்வி வளர்ச்சிக்காக பாடுபட்டு வருகிறது.
5. **நிவாரண முகாம்**
இயற்கை சீற்றங்களான பஞ்சம், வெள்ளம், நிலநடுக்கம், புயல் மற்றும் கொடிய தொற்று நோய்களிலிருந்து மக்களைக் காப்பாற்ற பல நிவாரண முகாம்களை நடத்தி சிறந்த சேவையாற்றி வருகிறது.
6. **மின் உற்பத்தி திட்டம்**

மேற்கு வங்கத்தில் உள்ள சுந்தரவனப் பகுதியில் சூரிய ஒளியை பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டம் தோன்றுவதற்கு முக்கிய பங்கு வகித்தது.

(இ) **நீதிக்கட்சி தோற்றம் - சாதனைகள்**

1. **நீதிக்கட்சியின் தோற்றம்**
   1. நீதிக்கட்சி பிராமணர்களின் ஆதிக்கத்திற்கு எதிராக தொடங்கப்பட்ட சமூக இயக்கமாகும்.
   2. இக்கட்சி 1916ல் ஏ.எம்.நாயர் மற்றும் தியாகராய செட்டியார் ஆகியோரால் சென்னை மாகாணத்தில் தோற்றுவிக்கப்பட்டது.
2. **நீதிக் கட்சியின் சாதனைகள்**
   1. 1921ல் பார்ப்பனர் அல்லாதவர்களுக்கு கல்வி மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களில் நியமனங்களில் இட ஒதுக்கீடு வழங்கியது.
   2. 1924ல் பொதுப் பணி தேர்வாணயம் மாற்றியமைக்கப்பட்டது.
   3. 1925 ஆந்திரா பல்கலைக்கழகமும், 1929 அண்ணாமலை பல்கலைக்கழகமும் தொடங்கப்பட்டன.
   4. 1926ல் இந்து சமய அறநிலைய சட்டம் கொண்டுவரப்பட்டது.
   5. தேவதாசி முறை ஒழிக்கப்பட்டது.
   6. பெண்கள் வன் கொடுமை தடை சட்டம் மற்றும் தொழிலாளர் நல சட்டங்கள் இயற்றப்பட்டன.
   7. ஏழைகளுக்கு இலவச வீட்டு மனை பட்டா வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.
   8. சென்னையில் பள்ளிகளில் இலவச மதிய உணவுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.
   9. ஆயுர்வேதம், சித்த மருத்துவம் மற்றும் யுனானி மருத்துவக் கல்விக்கு ஊக்கமளித்தது.
   10. 1921 ஆம் ஆண்டு பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.

49. (அ) **சார்க் அமைப்பு**

1. **நோக்கம்**
   1. சார்க் உறுப்பு நாடுகளின் உறவை நிலைநாட்ட
   2. தெற்காசியாவில் அமைதியை நிலைநாட்ட.
2. **தோற்றம்**
   1. இந்தியா முயற்சியின் விளைவாக சார்க் அமைப்பு 1985 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது.
   2. முதல் கூட்டம் - டிசம்பர் 7, 1985 வங்காளத்தின் தலைநகர் டாக்காவில் நடைபெற்றது.
   3. இதன் முதல் பொதுச் செயலாளர் அபுல் ஆஷான் ஆவார்.
3. **விரிவாக்கம்**
   இது தெற்காசிய நாடுகளின் பிராந்தியக் கூட்டமைப்பு என்று அழைக்கப்படுகிறது.
4. **மாநாடுகள்**
   1. 1985 – வங்காளதேசத்தின் டாக்கா நகரில்
   2. 2007 – இந்தியாவின் டெல்லியில்
   3. 2010 – பூடானின் திம்புவில்
   4. 2014 – நேபாளத்தின் காட்மண்டுவில் என இதுவரை 18 மாநாடுகள் நடைபெற்றுள்ளது.
5. **உறுப்பு நாடுகள் (PAIN MBBS)**
   இதில் எட்டு உறுப்பு நாடுகள் உள்ளன.
   1. பாகிஸ்தான்
   2. ஆப்கானிஸ்தான்
   3. இந்தியா
   4. நேபாளம்
   5. மாலத்தீவுகள்
   6. பூடான்
   7. பங்களாதேஷ்
   8. இலங்கை
6. **செயல்பாடுகள்** (SHARP - T3)
   நாடுகள் தங்களுக்குள்
   1. வானியல்
   2. சுகாதாரம்
   3. வேளாண்மை
   4. கிராமபுனரமைப்பு
   5. கடித சேவை
   6. போக்குவரத்து

7. சுற்றுலா
தகவல் தொடர்பு போன்றவற்றில் உதவி செய்து கொள்ளுதல்.

(ஆ) **ஜனநாயத்தின் எதிர்கட்சியின் பங்கு**

1. **அடுத்த பெரும்பான்மை கட்சி**
   ஆளுங்கட்சிக்கு அடுத்தப்படியாக பெரும்பான்மை இடங்களை பெறும் கட்சி அங்கீகரிக்கப்பட்ட எதிர்கட்சியாகும்.
2. **கண்காணிப்பது**
   ஆளும் கட்சி எதேச்சதிகார மனப்பான்மையுடன் செயல்படாமல் இருக்கவும், அவர்களின் அதிகாரங்களை வரையறுக்கவும், அவர்களை கண்காணிக்கவும் எதிர்க்கட்சிகள் முக்கிய பணியை மேற்கொள்கின்றன.
3. **விமர்சிப்பது**
   ஆளும் கட்சி தங்களது அதிகாரங்களை தவறான முறையில் பயன்படுத்தும்போது சட்ட சபைக்கு வெளியே செய்தித்தாள்கள் மற்றும் ஊடகங்கள் மூலம் விமர்சிப்பது எதிர்கட்சியின் முக்கிய வேலையாகும்.
4. **அறியும் உரிமை**
   அரசாங்கத்தின் செலவினங்களை அறிந்துகொள்ளும் முழு உரிமை எதிர்கட்சிக்கு உண்டு.
   ஆளும்கட்சியின் நிறை குறைகளை வெளிப்படுத்துதல்
5. **கேள்வி கேட்பது**
   தவறான முறையில் ஆளுங்கட்சியினர் அதிகாரங்களை பயன்படுத்தும் போது சட்ட சபையில் கேள்வி கேட்பது முக்கிய கடமையாகும்.
   ஆளும் கட்சியினர் அதிகாரங்களை தவறாக பயன்படுத்துவதற்கு தடையாக இருத்தல்.
6. **சமமான அதிகாரம்**
   எதிர்கட்சி தலைவர் ஆளும்கட்சி அமைச்சருக்கு சமமான அதிகாரம் உடையவர்.

(இ) **நுகர்வோர் உரிமைகள்**

1. **பொருட்களை பற்றிய அறிவு**
   பொருட்களின்
   1. தரம்
   2. அளவு
   3. தன்மை
   4. அதனுடைய உண்மை நிலை
   5. விலை ஆகியவற்றை தெளிவாக தெரியப்படுத்த வேண்டும்.
2. **நியாயமான விலை**
   பொருள்கள் நியாயமான விலையில் இருக்கிறதா, இல்லையா என்று சொல்வதற்கு உரிமை பெற்றுள்ளனர்.
3. **தீர்வு**
   நுகர்வோரின் நலன்கள், சம்பந்தப்பட்ட துறைகள் மூலம் தீர்வு செய்யப்பட வேண்டும்.
4. **தகவல் அறியும் சட்டம்**
   2005 அக்டோபர் 12ம் நாள் தகவல் அறியும் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.
5. **அடிப்படை உரிமை**
   இதன் மூலம். மக்கள் அனைத்து நடவடிக்கைகளையும் அறிந்து கொள்கின்றனர்.
   இது அவர்களின் அடிப்படை உரிமையாகும்.
6. **எதிர்ப்பினை தெரிவிக்கும் உரிமை**
   நுகர்வோரின் பொருட்கள் அவர்களது வாழ்க்கைக்கு அவர்களது சொத்திற்கும் பாதுகாப்பினை ஏற்படுத்தும் வேளையில் அவர்கள் அந்தப் பொருட்களைக் குறித்தும் தங்களது எதிர்பினைக் தெரிவிக்கும் உரிமை உள்ளது.

50. (அ) **தென்மேற்கு பருவகாற்றின் ஏதேனும் ஒரு கிளை**
தென்மேற்கு பருவக்காற்று இரு கிளைகளை கொண்டுள்ளது.
1. அரபிக்கடல் கிளை.
2. வங்காள விரிகுடா கிளை.

**வங்களா விரிகுடா கிளை**
1. வங்காள விரிகுடாவிலிருந்து வீசும் ஈரப்பதம் மிக்க காற்று காசி, காரோ, ஜெயந்தியா, குன்றுகள் மீது மோதுகிறது.
2. பின் காற்று மேலெழும்பி சிரபுஞ்சி கன மழையை கொடுக்கிறது.

3. மேற்கு நோக்கி நகர்ந்து கங்கை சமவெளிக்கு மழையைத் தருகிறது.
4. மேலும் மேற்கு நோக்கி நகரும் போது ஈரப்பதத்தை இழந்து பஞ்சாப், ஹரியானாவிற்கு குறைந்தளவு மழையை தருகிறது.
   பின் அரபிக்கடல் கிளையுடன் இணைந்து, சிவாலிக் குன்றுக்கு அதிக மழையை கொடுக்கிறது

(ஆ) **மும்மையில் பருத்தி ஆலைகள் அமைய சாதகமான காரணிகள்**

உலகில் அதிக பருத்தி ஆலைகளும், ஜவுளி ஆலைகளும் இங்கிலாந்தின் மான்செஸ்டர் என்ற நகரில் அமைந்துள்ளது. அதேபோல் இந்தியாவில் மகாராஷ்டிரத்தில் உள்ள மும்பையில் பருத்தி ஆலைகள் அதிக அளவில் காணப்படுகிறது. எனவே மும்பை இந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படுகிறது.

1. **துறைமுகம்**
   துறைமுகத்தின் அமைவிடமாக உள்ளதால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை ஏற்றுமதி செய்ய ஏதுவாக உள்ளது.
2. **போக்குவரத்து வசதி**
   பருத்தி விளையும் இடங்களுக்கும், ஆலைகளுக்கும் இடையில் தேவையான இரயில் மற்றும் போக்குவரத்து இணைப்பு உள்ளது.
3. **ஈரப்பத காலநிலை**
   நூலிழை தயாரிப்பதற்கு ஏதுவாக ஈரப்பதம் கொண்ட காலநிலை உதவுகிறது.
4. **மூலதனப்பொருட்கள்**
   மூலதனப் பொருட்களும் மற்றும் நிதிவசதியும் எளிதில் கிடைக்கிறது.
5. **பணியாட்கள்**

ஏராளமாக பணியாட்கள் கிடைக்கின்றனர். எனவே மும்பை பருத்தி மற்றும் ஜவுளி உற்பத்தியில் இந்தியாவில் முன்னணியில் உள்ளதால், இந்தியாவின் மான்செஸ்டர் என அழைக்கப்படுகிறது.

(இ) **தொலை நுண்ணுணர்வு நுட்பத்தின் தொகுதிகள்**

தொலை நுண்ணுணவர்வு நுட்பத்தின் தொகுதிகள் நான்கு பகுதிகளை கொண்டுள்ளது. அவை

1. இலக்கு 2. ஆற்றல் மூலம் 3. பிரதிபலிக்கும் வழி 4. உணர்வி ஆகியவை ஆகும்.

1. **இலக்கு**
   விரும்பும் ஒரு பொருளைப் பற்றிய தகவல்களைப் பெற புவியின் பொருட்களை நேரடியாக தொடர்பு கொள்ளாமல் தகவல்களை சேகரித்து பதிவு செய்வதாகும்.
2. **ஆற்றல் மூலம்**
   ஆற்றல் மூலமான சூரியன் மின்காந்த ஒளிக்கற்றைகளை புவிக்கூறுகளுக்கு வழங்குகிறது.
   இவை இரு வகைகளாக பிரிக்கப்படுகிறது.
   1. இயற்கை முறை 2. செயற்கை முறை
      1. **இயற்கை முறை :**
         சூரிய ஒளியில் பொருட்களின் பிரதிபலிப்பு
      2. **செயற்கை முறை :**
         ரேடார் கருவி மூலம் பெறப்படும் ஒலியை பிரதிபலிப்பது.
3. **பிரதிபலிக்கும் வழி**
   1. இலக்கின் பண்பையும், பிரதிபலிப்பையும் பொறுத்து மின்காந்த அலைகள் இலக்குடன் செயல்படுகின்றன.
   2. புவிக்கூறுகளின் மீது விழும் சூரிய ஒளியானது மீண்டும் வளிமண்டலத்திற்கு திருப்பி அனுப்பப்படுகிறது. இவ்வாறு பிரதிபலிப்பின் மூலம் இலக்கைப் பற்றி தகவல்கள் உணர்விகளுக்கு அனுப்பப்படுகிறது.
4. **உணர்வி**
   உணர்விகள் பெறுகின்ற ஆற்றலை அடிப்படையாக் கொண்டு துரித உணர்விகள் மற்றும் மந்த உணர்விகள் என வகைப்படுத்தப்படுகின்றன.
   1. **மந்த உணர்விகள் :** இயற்கையான வெப்ப ஆற்றல் பிரதிபலிப்பதை கண்டறிகிறது.
      **எ.கா :** சூரிய ஒளியில் புகைப்படக் கருவி மூலம் படம் படிப்பது.
   2. **துரித உணர்விகள் :**
      இலக்கிலிருந்து குறியீடுகளை வெளிப்படுத்தி பிரதிபலித்து ஆற்றலையும் அளக்க செய்கிறது.
      **எ.கா :** ரேடார் கருவி.

51. **(அ) நலம் நாடும் அரசுகளின் பணிகள்**

1. **பாதுகாப்பு சார்ந்த பணிகள்**
   1. ஒரு நாட்டில் அமைதி நிலவினால் மட்டுமே பொருளாதார முன்னேற்றம் அடைய இயலும்

2. மக்களை அந்நிய படையெடுப்பு மற்றும் உள்நாட்டு கலவரங்களில் இருந்து பாதுகாக்க வேண்டும்
3. சட்டம் ஒழுங்கை பாதுகாப்பது அரசின் முதன்மைப் பணியாகும்.

**2. நிர்வாகம் சார்ந்த பணிகள்**

1. மக்கள் பணியாற்றுவதற்கு சட்டமன்றம், நிர்வாகம் மற்றும் நீதித்துறை மூன்றும் அரசின் முக்கிய அலகுகளாக செயல்படுகிறது.
2. மக்களுக்கு நிர்வாகம் மூலம் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது.

**3. சமூக பாதுகாப்பு சார்ந்த பணிகள்**

1. அரசானது சமூக பாதுகாப்பு பணிகளாக
   1. ஏழைகள்
   2. உடல் நலமற்றோர் மற்றும்
   3. வேலையற்றோர்களுக்கு நிவாரண உதவிகளை அளிக்கிறது.
2. இதனால் சமுதாயத்தில் நலிவுற்றோர் பயனடைகின்றனர்.

**4. பொருளாதாரம் சார்ந்த பணிகள்**

1. வேளாண்மை, வணிகம் மற்றும் தொழில் வளர்ச்சிக்காக பல்வேறு நடவடிக்கைகளை அரசு மேற்கொள்கிறது.
வங்கித் துறையின் செயல்பாடுகள் பொருளாதார வளர்ச்சியை மையமாக கொண்டு நடைபெறுகின்றன

(ஆ) **பசுமைப் புரட்சி**

**1. அறிமுகம்**
1967ல் பசுமைப்புரட்சி அறிமுகப்படுத்தப்பட்டது.

**2. நோக்கம்**
இந்தியா உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடையச் செய்வது

**3. இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம்**
இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம் பசுமைப் புரட்சி என்ற செயல்முறையை நிலச்சீர்த்திருத்தம் அதிக விளைச்சல் தரும் வீரியமுள்ள விதைகள் பயன்பாடு மற்றும் மேம்படுத்தப்பட்ட பாசன வசதிகள் மூலமாக அறிமுகப்படுத்தியது.

**4. உற்பத்தி அதிகரிப்பு**
பசுமைப் புரட்சி என்பதே கோதுமை மற்றும் அரிசி போன்ற உணவுப் பயிர் உற்பத்தி அதிகரித்தது. அதற்காக வீரியமுள்ள விதை, நீர்பாசன வசதிகள், இரசாயன உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள் பயன்படுத்தப்பட்டன.

**5. வேளாண் பல்கலைக்கழகங்கள்**
அதிக விளைச்சல் தரும் விதைகளை பயன்படுத்துவதற்கு இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனமும், வேளாண் பல்கலைக்கழகங்களான லூதியானா, பந்த் நகர், கோயம்புத்தூர் முக்கிய காரணம் ஆகும்.

**6. உற்பத்தி தன்னிறைவு**
பசுமை புரட்சியின் விளைவாக கோதுமை மற்றும் அரிசி உற்பத்தியில் இந்தியா தன்னிறைவு அடைந்தது.

(இ) **தமிழ் நாட்டின் மின்சக்தி திட்டங்கள்**

**1. அனல்மின் சக்தி உற்பத்தி**

1. எண்ணூர் 2. தூத்துக்குடி 3. நெய்வேலி 4. மேட்டூர் ஆகிய இடங்களில் நிலக்கரியைக் கொண்டு அனல் மின் உற்பத்தி செய்யப்படுகிறது.

**2. நீர் மின் நிலையங்கள்**

1. மேட்டூர் 2. குந்தா 3. பெரியார் அணை 4. கோதையாறு அணை
5. பைக்காரா 6. சிங்காரா 7. மாயாரில் நீர் மின் நிலையங்கள் அமைந்துள்ளன.

**3. அணுமின் சக்தி உற்பத்தி**

1. கல்பாக்கம் 2. கூடங்குளத்தில் அணுவிலிருந்து மின் சக்தி உற்பத்தி செய்யப்படுகிறது.

**4. காற்று மின் சக்தி**

1. கோயம்புத்தூர் 2. கன்னியாகுமரி 3. தூத்துக்குடி 4. திருநெல்வேலி
5. இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் காற்றிலிருந்து மின் சக்தி உற்பத்தி செய்யப்படுகிறது.

**5. உயிரி பொருட்கள் எரிசக்தி**


1. தருமபுரி 2. நாமக்கல் மாவட்டங்களில் வேளாண் கழிவுப் பொருட்களிலிருந்து மரபு சாரா மின் உற்பத்தி செய்யப்படுகிறது.

52. காலக்கோடு 1910 – 1930 (ஏதேனும் 5 மட்டும்)


**1911 - முதல் வட்டமேசை மாநாடு**
**1914 – முதல் உலகப் போர் தொடக்கம்**
**1916 – தன்னாட்சி இயக்கம், லக்னோ உடன்படிக்கை**
**1917 – ஆகஸ்டு அறிக்கை**
**1918 – முதல் உலகப்போர் முடிவு**
**1919 – மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தம், ரௌலட் சட்டம், ஜாலியன் வாலாபாக் படுகொலை**
**1920 – ஒத்துழையாமை இயக்கம்**
**1922 – சௌரி சௌரா சம்பவம், ஒத்துழையாமை இயக்கம் கைவிடல்**


**1923 – சுயராஜ்ஜிய கட்சி தோற்றம்**
**1927 – சைமன் குழு அமைக்கப்பட்டது**
**1928 – சைமன் குழு இந்தியா வருகை**
**1929 – லாகூர் காங்கிரஸ் மாநாடு**
**1930 – உப்பு சத்தியாகிரகம், சட்ட மறுப்பு இயக்கம், தண்டி யாத்திரை, முதல் வட்ட மேசை மாநாடு**

53. அ. ஆசியா வரைபடம்




ஆ. . இந்தியா வரைபடம்






பே. சீனிவாசன்
பட்டதாரி ஆசிரியர் (வரலாறு)
அரசு உயர்நிலைப் பள்ளி
கங்கலேரி – 635 122
கிருஷ்ணகிரி மாவட்டம்
அலைபேசி : 99943 94610
மின் அஞ்சல் : srinivasanb2401@gmail.com